16.03.2026 OS.No.20/2024 PW3 Name :.வேலு

குறுக்கு விசாரணை

1. சுமார் 40 ஆண்டுகளாக நான் பெங்களூரில் வசிக்கிறேன். சுப்பிரமணி என்னுடைய அண்ணன். அவருக்கு சொத்து என்னுடைய அப்பா வாங்கி கொடுத்தது. அதன் சர்வே எண், விஸ்தீரணம் தெரியாது. என் அண்ணன் சுப்பிரமணிக்கு நாயக்கனூரில் பாத்தியபட்ட சொத்து 1 ஏக்கர் இருந்தது என்றால் அவ்வாறு இல்லை. வழக்கிற்காக அதை மறுத்து கூறுகிறேன் என்றால் சரியல்ல. அந்த சொத்தை தான் வாதிகளின் தாயாருக்கு கொடுத்துள்ளார் என்றால் அவ்வாறு இல்லை. சிவக்குமார் தற்சமயம் ஆம்பூரில் குடியிருக்கிறார்.
2. வள்ளியம்மாள் வீரனமலை குடியிருக்கிறார். கூட்டுபட்டா எதுவும் நான் பார்க்கவில்லை. வாதிகளும் பிரதிவாதிகளும் கூட்டாக வசிப்பதற்கு எழுத்துமூலமான ஆவணங்கள் இல்லை. வழக்கு சொத்தில் தற்சமயம் பழனி, தங்கம் கோவிந்தமாள் ஆகியோர்கள் வசிக்கிறார்கள். வழக்கு சொத்தை சுப்பிரமணி உயிருடன் இருக்கும்போது கோவிந்தம்மாளுக்கு கொடுத்துவிட்டார் என்றால் அவ்வாறு இல்லை. வாதிகள் இதுநாள்வரை வாரிசு சான்றிதழ் வாங்கவில்லை என்றால் சரியல்ல. வாதிகளுக்கு தாவா சொத்தில் எந்த பங்கும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு பற்றி எதுவும் தெரியாமல் வாதிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 16/03/2026 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2026.03.16 16:42:32 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.